வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 25.04.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 116 பக்கங்கள் : 12

# உப்பில் நீங்கள் பார்ப்பது பெயரையா ருசியையா?

## வடக்கு மக்களை கேட்கிறார் பிமல்

- சிறிய விடயங்களுக்கும் வடக்கில் இனவாதம்
- ஈஸ்டர் தாக்குதல் சந்தேகத்திலேயே பிள்ளையான் கைது!
- வடக்கு இளைஞர்களுக்கு இனி கனடா வேண்டாம்
- வடக்கின் பெரிய தமிழ் கட்சியும் நாங்கள்தான்
- வடக்கின் கள்வர்களையும் கைது செய்வோம்!

- குமார. கோகுலன் -



வவுனியா, ஏப்ரல் 25

ஆனையிறவு உப்பு உற்பத்தியை நாம் ஆரம்பித்துள்ளோம். அதனை தொடங்கிய பின்னர் சுமந்திரனுக்கு அது பிரச்னையாக உள்ளது - உப்பு பைக்கெற்றில் பெயர் பிழையாம். (சிங்களத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை) உப்பிலே நீங்கள் பார்ப்பது பெயரையா ருசியையா? இவ்வாறான சிறிய விடயங்களுக்காக இனவாதத்தைத் தூண்டும் ராஜபக்ஷக்கள் போன்ற சகோதரர்கள் வடக்கிலும் உள்ளனர் - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார். 11

## போருக்கு சிங்கள மக்களை தயார்படுத்தியது ஜே.வி.பியே!

### கஜேந்திரகுமார் எம். பி.

மட்டக்களப்பு, ஏப். 25

தமிழருக்கு எதிரான கண்மூடித்தனமாக போருக்கு சிங்கள மக்களை தயார்படுத்தியதும் வடக்கு, கிழக்கை பிரித்ததும் ஜே. வி. பியே. இவை தமிழ் மக்களின் ஆழ்மனதில் பதிந்துள்ளன. அந்தக் கட்சியை நாம் ஏன் வெறுக்கிறோம் என்பதை கூறவேண்டியதில்லை - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு கூறியுள்ளார்.



மட்டக்களப்பு - போரதீவுபற்று பிரதேச சபையில் கில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டயிடும் வேட்பாளர் அறிமுக நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## பாடசாலைகளுக்கு மே 5,6 விடுமுறை!

கொழும்பு, ஏப். 25

எதிர்வரும் மே 05, 06ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக, பாடசாலைகள் வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படவுள்ளன. 11

## நாளை தேசிய துக்க தினம்!

கொழும்பு, ஏப். 25

திருத்தந்தை பிரான்சிஸின் மறைவையடுத்து அவரின் இறுதிச்சடங்கு நடைபெறும் தினமான நாளை சனிக்கிழமையைத் தேசிய துக்க தினமாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாளைய தினம் அனைத்து அரச நிறுவனங்களிலும் 11

## அமெரிக்காவுடனான பேச்சில் இணக்கம் எட்டப்படவில்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

அமெரிக்கா சென்ற இலங்கை பிரதிநிதிகள் குழு அங்கு வரி குறைப்பு தொடர்பில் எவ்வித இணக்கப்பாடுகளையும் எட்டியதாக எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பணிமனையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், அமெரிக்கா சென்ற இலங்கை பிரதிநிதிகள் குழு எந்தவித இணக்கப்பாட்டையும் எட்டியதாக எமக்குத் தகவல் கிடைக்கவில்லை. இது தொடர்பில் வெளியிடப்படவுள்ளதாகக் கூறப்படும் கூட்டு அறிக்கையை எதிர்பார்த் திருக்கிறோம். அந்த அறிக்கையின் ஊடாக வரி 44 சதவீதத்திலிருந்து எவ்வாறு 11

## செம்மணியில் படுகொலை நினைவுமுற்றம் நிறுவப்படும்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், ஏப். 25

தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த பேரவலங்களை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் வகையில் செம்மணி படுகொலை நினைவு முற்றம் உருவாக்கப்படும். அத்துடன், தமிழின வரலாற்றுடன் தொடர்புடைய விடயங்கள் புனரமைக்கப்படும் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய பேரவை என்ற கூட்டணியை அமைத்துள்ளது. இந்தக் கூட்டணியின் 11

## மக்களை அலைக்கழிக்கும் அதிகாரிகள்மீது நடவடிக்கை

### வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25

ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மக்களை அலைக்கழிப்பதை - பழிவாங்குவதை நிறுத்தாவிடின் எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுத்து தண்டனை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான கலந்துரையாடலிலேயே 11

## வீரர்களின் போர் நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 26

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிகளின் பெருந்துடுப்பாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

23ஆவது ஆண்டாக நடைபெறவுள்ள இந்தப் பெருந்துடுப்பாட்ட போட்டி நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையுமாக இரு 11

## மருத்துவமனையின் காணியை படையினர் விடுவிக்க வேண்டும்

### யாழ். போதனா பிரதி பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப். 25

இராணுவத்தினரின் பிடியிலுள்ள யாழ். போதனா மருத்துவமனைக்கு சொந்தமான கொட்டடி - மீனாட்சிபுரத்திலுள்ள காணியை விடுவிக்க வேண்டும் என்று அந்த மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் சி. யமுனானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

கொட்டடி - மீனாட்சிபுரம் பகுதியில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு சொந்தமான 11

அமெரிக்காவுடனான பேச்சு;

## தவறான தகவல்களை தெரிவிக்கிறதா அரசு?

### ரணில் விக்கிரமசிங்க சந்தேகம்

கொழும்பு, ஏப். 25

தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் தொடர்பில் அரசாங்கம் தவறான தகவல்களை மக்களுக்குக் கூறுகிறதா என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றைய தினம் கண்டியில் நடந்த கூட்டமொன்றில் பேசிய அவர், " பரஸ்பர வரி விதிப்பு 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களுடன் முரண்பாடு; பொலிஸார் மீது விசாரணை!

## வடக்கு பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்ற இளைஞர் குழுவுடன் முரண்பட்டதுடன், அவர்களை மிரட்டிய மாங்குளம் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து இளைஞர் குழு ஒன்று வவுனியாவுக்கு காரில் பயணமானது. காரில் சென்ற இளைஞர்களை கண்களில் ரோர்ச் லைற் வெளிச்சத்தை பாய்ச்சி பொலிஸார் இருவர் மறித்தனர்.

கண்களில் வெளிச்சத்தை பாய்ச்சி மறிப்பது தவறு என்று அந்த இளைஞர் குழு தம்மை மறித்த பொலிஸாருக்கு கூறினர். இதைத் தொடர்ந்து அவர்களிடையே முரண்பாடு ஏற்பட்டது. இதையடுத்து, பொலிஸார் இருவரும் அந்த இளைஞர்களை மிரட்டினர்.

இந்த விடயம் தொடர்பில் செய்திகள் வெளியாகின. இது தொடர்பில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து, இளைஞர்களுடன் முரண்பட்ட பொலிஸார் இருவர் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பமாகியுள் ளன என்று பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-05)

# தபால் மூல வாக்களிப்பு யாழ்ப்பாணத்தில் சுமுகம்

யாழ்ப்பாணம், ஏப். 25
உள்ளூராட்சி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றைய தினம் யாழ். மாவட்டத்தில் சுமுகமாக நடைபெற்றது.

எதிர்வரும் 6ஆம் திகதி உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் வட்டத்தில் 21 ஆயிரத்து 64 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதற்காக, 292 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இன்றைய தினமும் தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது. இந்த இரு நாட்களிலும் வாக்களிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சித்த மருத்துவ பீடத்தின் தமிழ் மொழிமூல கற்பித்தலை மாற்றம் செய்யக்கூடாது!

## ஆறு. திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் ஆங்கிலமொழி மூல கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம். இது ஆபத்தானது. எமது சுதேச மருத்துவ பாரம்பரியத்தை பேணிப்பாதுகாப்பதற்காக சித்தமருத்துவ பீட கற்கை நெறி தமிழ் மொழியில் தொடரவேண்டும் இதனை பல்கலைக் மூக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு யாழ். பல்கலைக்கழக சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் ஆறு. திருமுருகன் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் பல சான்றோர் பெருமக்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. எமது பிரதேச பல்கலைக்கழகம் எமது பிரதேச சுதேசிய பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் பெரும் கடமையாகும். எமது சுதேசிய மருத்துவப் பாரம்பரியம் பேணிப்பாதுகாப்பதற்காக யாழ் பல்கலைக் கழக கல்விச் சமூகம் 70 களின் பிற்பகுதியில் எடுத்த முயற்சியின் விளைவாக சித்தமருத்துவத் துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பேராசிரியர் வித்தியானந்தனின் அயராத முயற்சியால் சித்த மருத்துவ நூல்கள் ஏடுகள் சேகரிக்கப்பட்டு பாரம்பரிய வைத்தியர்களிடம் ஆலோசனை பெற்று பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இத்துறை ஆரம்பிக்கப்பட்டது.

இணுவில், வட்டுக்கோட்டை, சில்லாலை, ஏழாலை, பருத்தித்துறை, அளவெட்டி போன்ற ஊர்களில் இருந்து சித்த வைத்தியர்களின் நூல்கள், உதவிகள் பெறப்பட்டன. பல்கலைக்கழக நூலகர் முருகவேள், பதிவாளர் சிவராஜா போன்ற பெருமக்கள். சித்த மருத்துவத் துறைக்கான வளர்ச்சியில் அருந்துணை செய்துள்ளனர்.

சித்த மருத்துவ பீடம் முற்று முழுதாக சுதேசிய வைத்திய பாரம்பரியத்தை சிறப்பாக வளர்த்தெடுத்துள்ளார்கள். மேலும் கைதடியிலுள்ள சித்த வைத்திய போதனா வைத்திய சாலையின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றார்கள். பல நூறு சித்த மருத்துவர்களை தொடர்ந்து உருவாக்கியுள்ளார்கள்.

துறை சார் விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்புகளை மேற்கொண்டு இன்று நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக விளங்குகிறார்கள். சகல கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளும் தமிழ்மொழி மூலம் சிறப்பாக நடைபெறுகின்றன. நீண்டகாலமாக எடுத்த முயற்சியின் பயனாக சித்த மருத்துவத் துறை தனிப்பீடமாக உயர்வு பெற்றுள்ளது மேலும் சித்த மருத்துவபீடம் விஸ்தரிப்பதற்காக புதிய நிலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் உயர்கல்வி அமைச்சு யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையை ஆங்கிலமொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம். இது ஆபத்தானது. இது பாரம்பரிய சித்த மருத்துவத் துறையை அருகிப்போகச் செய்யும் முயற்சியாகும். அகத்தியர் பதினெண் சித்தர்கள்,திருமூலர், திருக்குறள், பரராஜசேகரம் போன்ற மூல நூல்களை மொழி பெயர்ப்பதென்பது முடியாத விடயம்.

இதை அனைவரும் அறிவர். இந்நிலையில் சித்த மருத்துவத்தை ஆங்கில மொழியில் எவ்வாறு கற்பிக்கப் போகிறார்கள்? இவ் விடயம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மூதவை, பேரவை மற்றும் துறைசார்ந்த அறிஞர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

எக்காரணம் கொண்டும் தமிழ் மொழி மூல கற்பித்தலை மாற்றம் செய்யக்கூடாது. இதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு யாழ். பல்கலைக்கழக சமூகம் தெளிவுபடுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கத்தின் மீளாய்வு கூட்டம்!



யாழ்ப்பாணம், ஏப். 25
இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கத்தின் கிராம மட்ட சங்கங்களின் வருடாந்த மீளாய்வு கூட்டமானது நேற்றும் நேற்று முன்தினமும் காவேரி கலா மன்றத்தின் வழிகாட்டலில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வட, கிழக்கு மாகாணங்களின் 22 சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, சங்கங்களின் செயல்பாட்டு மீளாய்வு 2025 -2026ஆம் ஆண்டுகளுக்கான செயல்பாட்டு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு திட்ட அறிக்கைகளும் திட்ட முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன.

இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கம் தேசிய மட்டத்தில் இலங்கை முழுவதும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காக மாவட்ட மற்றும் கிராமமட்ட செயல்குழுக்களை அமைத்து அவர்களின் தேவைகளுக்காக சேவைகளை வழங்கி வருகின்றது.

உலக சுகாதார நிறுவனம் தொழுநோயாளர் சங்கங்களின் வினைத்திறனான செயல்பாடுகளாலேயே தொழுநோய் பரவுவது கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியும் என்பதை வலியுறுத்தி வருகிறது. இந்த அறிவுறுத்தலின் அடிப்படையில்தான் இலங்கை தொழுநோயாளர் சங்கம் தேசிய மற்றும் மாவட்ட மற்றும் கிராம மட்டங்களில் ஏனைய சுகாதார மற்றும் சமூக சேவை அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது. இதன் அடிப்படையில் கிராம மட்ட தொழு நோயாளர் மறுவாழ்வு சங்கங்களின் செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 15 மாணவர்களுக்கு காலணிகள் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 25
கல்வி, விளையாட்டு துறையில் சிறந்து விளங்குகின்ற உதவி தேவைப்படும் 15 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப்பட்டன.

"விதையனைத்தும் விருட்சமே" செயல்திட்டம் ஊடாக ஜேர்மன் நாட்டில் கிறிஸ்தோபர் செல்வஸ்டீபனின் 23ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

உதவித் திட்டத்தின் பயனாளர்கள் மலரும் மூளாய் அமைப்பால் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்நிகழ்வில் ஒய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராஜா கலந்து கொண்டு உதவித் திட்டங்களை வழங்கி வைத்தார். (ஐ -05)

# படைப் புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்துவது அவசியம்!

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு அறிவுறுத்து

கிளிநொச்சி, ஏப். 25
கிளிநொச்சி மாவட்டத்தில் படைப் புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது. விவசாய திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி விவசாயிகள் அதனை கட்டுப்படுத்த வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சோதி வட்சுமி விஜயராசா கேட்டுள்ளார்.

நேற்றைய தினம் ஊடகங்களை சந்தித்தபோதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்தநிலையில் படைப் புழுவின் தாக்கம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது.

இந்தப் புழுவை கட்டுப்படுத்துவது தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக விவசாய போதனாசிரியர்கள், பாடவிதான உத்தியோகத்தர்கள் செயல்பட்டு வருகின்றனர். எனவே, குறித்த புழுவை கட்டுப்படுத்த விவசாய திணைக்கள மற்றும் போதனாசிரியர்களின் அறிவுறுத்தல்களை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.04.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## யுத்தத்தை தேர்தல் முதலீடாக்குதல்

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்கள் முற்றுப்பெறவுள்ள நிலையில் ஒவ்வொரு கட்சியும் தங்களின் வெற்றிக்கான பிரசாரங்களை தீவிரப் படுத்தி வருகின்றன. தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்கள் மத்தியில் வெற்றி பெறுவதைத் தடுக்கும் நோக்கிலான பிரசாரங்களிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

இதில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கூட்டணி குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதிகம் இறுதி யுத்தத்தில் ஜே. வி. பியின் பங்கு தொடர்பில் பிரசாரங்களை முன்வைத்து வருகிறார். இறுதி யுத்த வெற்றிக்காக சிங்கள மக்களை தயார்ப்படுத்திய கட்சி, வடக்கு - கிழக்கை பிரித்த கட்சியென்னும் கருத்துகளை அவர் முன்வைத்து வருகிறார். ஒப்பீட்டடிப்படையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் அதிகம் இறுதி யுத்த விடயங்கள் தொடர்பில் பிரசாரங்களை முன்னெடுக்கவில்லை.

யுத்த வெற்றியை தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்தும் அரசியல் என்பது ராஜபக்ஷக்களின் அரசியலாகும். சிங்கள மக்களின் ஆதரவைத் தக்கவைப்பதற்கு தங்களின் யுத்த வெற்றியை ஒரு பலமான முதலீடாக பயன்படுத்தினர். ஆனால், பொருளாதார நெருக்கடியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகளையும் அடுத்து அவர்களுக்கு யுத்த வெற்றி வாதம் தொடர்ந்தும் கைகொடுக்கவில்லை. சிங்கள மக்கள் ராஜபக்ஷக்களுக்கு எதிராகத் திரும்பியபோது பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது முற்றிலும் சரிதான் என்பது தெளிவானது.


மக்களின் வாழ்வு பெரும் நெருக்கடியை சந்திக்கும்போது முன்னைய வெற்றிவாதங்கள், தேசிய பெருமைகள் எவையும் பயன்படுவதில்லை. இந்த அடிப்படையில் நோக்கினால் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி என்பது அவ்வாறான யுத்த வாடை இல்லாத வெற்றியாகும். அவர்கள் விடுதலைப் புலிகள் தொடர்பிலோ, யுத்த வெற்றி தொடர்பிலோ பேசி சிங்கள மக்களின் ஆதரவைக் கோரவில்லை.

இந்த நிலையில் யுத்த வாடையை தேசிய மக்கள் சக்திக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமென்று தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்துவதாக கூறுவோர் நம்புகின்றனர். இந்தப் பின்புலத்தில்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இறுதி யுத்தத் தோல்வியை சுட்டிக்காட்டினால் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை நோக்கிச் செல்வதை தடுக்க முடியுமென்று எண்ணுகிறார் போலும். இது ஒருவகையில் யுத்தத் தோல்வியை தேர்தல் பிரசாரமாக்கும் உத்தியாகும்.

ஆனால், ராஜபக்ஷக்களை நோக்கியது போன்று மற்றவர்களை தமிழ் மக்கள் நோக்குவதாகத் தெரியவில்லை. ராஜபக்ஷக்களை சுட்டிக்காட்டி தமிழ் மக்களின் எதிர்ப்பை ஒன்றுதிரட்ட முடிந்தது. அந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்போது வெற்றி பெற்றிருந்தது. ஆனால், ராஜபக்ஷக்கள் தென்னிலங்கையில் வீழ்ச்சியுற்றபோது தமிழ்த் தேசிய கட்சிகளால் முன்னரைப் போன்று தமிழ் மக்களை பெருமளவுக்கு தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாமல் போனது என்பதே உண்மை. இந்த விடயத்தைத் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் சரிவர புரிந்து கொள்ளவில்லை.

ஏற்கனவே, தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விட்டனர். இந்தப் பின்புலத்தில் தேசிய மக்கள் சக்திக்கான தமிழ் மக்களின் தொடர் ஆதரவு இருப்பதும் - இல்லாமல் போவதும் தேசிய மக்கள் சக்தியின் பொறுப்பான - அதேபோன்று பொறுப்பற்ற செயல்பாடுகளில்தான் தங்கியிருக்கிறது. தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஒரு வேளை வாக்களிப்பதை தவிர்க்கலாம். ஆனால் இங்கு கேள்வி, அவ்வாறான மக்கள் ஏன் தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கி வர வேண்டும்? அதற்கான வலிமையான காரணம் என்ன? இந்த இடத்தைத்தான் தமிழ்க் கட்சிகள் உன்னிப்பாக நோக்க வேண்டும்.

## தபால் வாக்கெண்ணும் அலுவலர்க்கான கூட்டம்



யாழ்ப்பாணம், ஏப். 25

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக அஞ்சல் வாக்கெண்ணும் அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், எதிர்வரும் மே 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் வாக்கெண்ணல் செயல்பாடானது அந்தந்த வட்டாரங்களிலேயே நடைபெறவுள்ளது. 50இற்கும் குறைவான அஞ்சல் வாக்குகளை வாக்களிப்பு நிலையத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்படும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் வாக்கெண்ணல் கடமைகளை மேற்கொள்வார். 50 மற்றும் 50இற்கும் அதிகமான தபால் மூல வாக்குகள் இருப்பின் அந்த வாக்கெண்ணல் கடமைக்காக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆகையால், வாக்கெண்ணல் கடமைகளில் அவதானம் செலுத்தி வாக்குகளை சரியான முறையில் கணிப்பிடுவதற்கு கடமையை நேர்த்தியாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

இதைத் தொடர்ந்து, அஞ்சல் வாக்கெண்ணல் அலுவலர்களின் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் உதவித் தேர்தல் ஆணையாளர் இ. சசீலன் விளக்கமளித்தார். (ஐ-05)

## 52 தேர்தல் விதி மீறல்கள் யாழ்ப்பாணத்தில் பதிவு

யாழ்ப்பாணம், ஏப். 25

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் வரை 52 தேர்தல் விதி முறை மீறல்கள் பதிவாகியுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ பிரிவால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## போப் பிரான்சிஸ்க்கு ஜனாதிபதி இரங்கல்!

### வத்திக்கான் தூதரகத்தில் பதிவு செய்தார்



கொழும்பு, ஏப். 25


பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்று வியாழக் கிழமை வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்றார்.

தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதியை, இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் பிரையன் உதைக்வே ஆண்டகை வரவேற்றார்.

பின்னர், பேராயருடன் சிறிது நேரம் உரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் பரிசுத்த பாப்பரசருக்கான தனது இரங்கல் குறிப்பை பதிவு செய்தார்.

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸூக்காக உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் சார்பாக இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினரும் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். தலைமையின் ஆதரவை பெறுவீர்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். நீண்ட நாள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரதில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்கள் திறமைகள் வெளிப்படும்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**தனுசு**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பர்.

**மகரம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் அவசரப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
குடும்பத்தை விட்டு கொடுத்து போவது நல்லது. யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனமுடன் செயல்பட வேண்டும்.





# வவுனியாவில் தபால் மூல வாக்களிப்பு ஆரம்பம்

வவுனியா, ஏப். 25

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

வவுனியா மாவட்டத்திலும் வாக்களிப்பு செயல்பாடுகள் நடைபெற்றன. வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்குச் செலுத்தினர்.

இதேவேளை, வவுனியாவில் 5550 பேரும் முல்லைத்தீவில் 3807 பேரும் மன்னாரில் 3792 பேருமாக வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 13,149 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

(எ-10)

# யாழில் கிராம அலுவலர்களுக்கான தேர்தல் முன்னாயத்த செயலமர்வு!

யாழ்ப்பாணம், ஏப்.25

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பில் கிராம அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட முன்னாயத்த செயலமர்வு யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர் பிரதீபன் கூறுகையில், நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றன. அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய கிராம அலுவலர்களுக்கு நன்றிகள். எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் வாக்களிப்பு நிலையத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்படும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு அந்தந்த பிரிவுக்குரிய கிராம அலுவலர்கள் வழங்கும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானதும் அத்தியாவசியமானதும் ஆகும். இம்முறை வட்டாரத்திலேயே வாக்கெண்ணல் அமையவுள்ளதால் வாக்கெண்ணல் நிலையங்களையும் அமைக்கும் பொறுப்புக்கள் கிராம அலுவலர்களுக்கு உள்ளதால் பௌதீகச்சூழல் மற்றும் புறச்சூழல் போன்றனவற்றை கருத்தில் கொண்டு வினைத்திறனான பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். (எ- 05)

# தொடர்ந்து இடம்பெறும் கொலைகளால் பாதுகாப்பு நிலை குறித்து மக்கள் அச்சம்

## அரசாங்கம்மீது ரிஷாட் எம். பி. குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 25

நாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கொலைகள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் மோதல்கள் - கொலைகள், பாதுகாப்பு நிலைகுலைந்து மக்கள் அச்சம் கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை ஆதரித்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜே.வி.பி. எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் இவ்வாறான கொலைகள் இடம்பெற்ற போது அதற்கு எதிராக ஆட்சியாளர்கள் மீது குற்றஞ்சாட்டியது. ஆனால், புதிய அரசாங்கத்தின் வருகையின் பின் அடிக்கடி கொலைகள், பாதாள உலகக் குழுக்களின் கொலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் கொல்லப்பட்டவர் (டான் பிரியசாத்) சம்பந்தமாக எங்களுக்கு வேறுபட்ட கருத்துகள் இருந்தாலும் தொடர்ச்சியாக இவ்வாறான கொலைகள் இடம்பெறுவது எதிர்காலத்தில் சுற்றுலாத்துறை பாதிக்கப்படுவதற்கும், இந்த நாட்டின் பாதுகாப்பு நிலை குலைந்து மக்கள் அச்சம் கொள்ளும் நிலை உருவாகுவதற்கும் வழிவகுக்கும்.

இந்த அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்பில் இன்னும் மெத்தனப் போக்கோடு நடந்து கொள்கிறது. அதனையும் கவனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டும். அதேபோல் தேர்தலுக்கு முன்னர் வழங்கிய பல வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளாக இருக்கின்றன.

அதுமட்டுமல்லாது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க எல்லோரும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பதாகத் தான் சொல்லி வந்தார்கள். அதுவும் இந்த அரசாங்கம் ஏப்ரல் 21 இற்குள் குற்றவாளிகளை கண்டுபிடிப்போம். அறிவிப்போம் என்று கூறியது. ஆனால், எல்லாம் செய்தியாகத் தான் இருக்கிறதே தவிர, மக்கள் எதிர்பார்த்த எதுவும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களும், சிறைகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட இஸ்லாமிய மக்களும் இந்த விடயத்தில் அரசாங்கத்தின் மீது பெரிய எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியில் இருக்கும் போது பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக பேசி வந்தவர்கள், இப்போது அந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி கைது செய்கிறார்கள். குறிப்பாக போஸ்டர் ஒட்டுதல், முகப் புத்தகத்தில் பதிவேற்றுதல் என்பனவற்றுக்கு எதிராக இந்தச் சட்டத்தை பயன்படுத்துகிறது அநுர அரசு. எனவே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்" - என்றார். (எ-10)

# பூந்தோட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பிரசாரம்!



வவுனியா, ஏப். 25

வவுனியா, பூந்தோட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில், அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்து கொண்டார். அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் மற்றும் மாநகர சபையின் ஏனைய வட்டாரங்களின் வேட்பாளர்களும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வரி அபிவிருத்தி ஏணியில் ஏறமுயலும் நாடுகளை திணறடிக்கும்!

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 25

**அமெரிக்காவினால் விதிக்கப்பட்டிருக்கும் தீர்வைகள் வெறும் இலக்கங்கள் மாத்திரமல்ல. மாறாக அவை அபிவிருத்தி எனும் ஏணியில் ஏறமுயலும் நாடுகளின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரம் விரிவடைந்தால், அதனூடாக அமெரிக்கா அதிகளவு பயனைப் பெறமுடியும். இருப்பினும் அதற்கு, முதலில் இலங்கை போன்ற நாடுகள் வளர்ச்சியடைவதற்கு அமெரிக்கா இடமளிக்கவேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.**



அமெரிக்காவினால் புதிதாக விதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதித் தீர்வை தொடர்பில் மேற்கண்டவாறு கருத்துரைத்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகத்தினால் இலங்கையின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டிருப்பினும் இன்னமும் முழுமையாக நீக்கப்படாத 44 வீத தீர்வை பொருளாதார யதார்த்தங்களைப் புறந்தள்ளி, இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படும் கொள்கைக்கு சிறந்த உதாரணமாகும்.

பொருட்கள் சார்ந்து பதிவாகியிருக்கும் வர்த்தகப் பற்றாக்குறையே இதற்கான பதிலாக இருக்கிறது.

ஆனால் யதார்த் தத்தை புறந்தள்ளி மேற்கொள்ளப்படும் குறுகிய தீர்மானங்களால் இரு நாடுகளும் பாதிப்படையும் என்பதே உண்மை.

இலங்கை 4000 டொலரகளை தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியாகக் கொண்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடாகும். இருப்பினும் அமெரிக்காவின் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி 80,000 டொலர்களாகும்.

எனவே இருநாடுகளுக்கும் இடையில் நிலவும் இந்த இடைவெளியானது மற்றைய நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யத்தக்க கொள்கைகள் உருவாக்கப்படுவதை ஊக்குவிக்கவேண்டுமே தவிர, பிறிதொரு நாட்டைத் தண்டிக்கும் வகையில் அமையக்கூடாது-என்றார். (அ)

# மதுபோதையில் ஓட்டோவை செலுத்திய வேட்பாளர் கைது

கொழும்பு, ஏப். 25

மதுபோதையில் ஓட்டோவைச் செலுத்திச் சென்றதாக கூறப்படும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கினிகத்தேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கினிகத்தேனை பொலிஸார் இரவு நேர சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது நுவரெலியா - கினிகத்தேனை பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த ஓட்டோ ஒன்றை சோதனையிட்டுள்ளனர்.

சோதனையில், ஓட்டோச் சாரதி மதுபோதையில் இருப்பதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து ஓட்டோச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், ஓட்டோச் சாரதி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் என தெரியவந்துள்ளது.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தலைக்கவசம் அணிந்தவாறு நடமாடுவோருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 25

தலைக்கவசம் அணிந்து நடமாடுவோரை விசாரணைக்குட்படுத்த அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் வேளையில் மாத்திரம் தலைக்கவசம் அணிவது கட்டாயமாகும் என்பதுடன் அதை விடுத்து ஏனைய நேரங்க ளில் தலைக்கவசம் அணிந்து நடமாடுவோரை விசாரணைக்குட்படுத்த அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்கும்போது அநீதி நடந்தால் அமைச்சுக்கு அறிவியுங்கள்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஏப். 25

அரசியல்வாதிகள், அதிபர்கள் நன்மைகளை எதிர்பார்த்து பிள்ளைகளை பாடசாலைகளுக்கு சேர்த்த காலம் முடிவடைந்துவிட்டது.

பிள்ளைகளை பாடசாலைகளுக்கு சேர்க்கும் போது அநீதிகள் நடந்தால், அமைச்சுக்கு அறிவியுங்கள், எவருக்கும் அரசாங்கத்திடம ருந்து விசேட கவனிப்பு கிடையாது. பிள்ளைகளை பாடசாலைகளுக்கு சேர்க்கும் போது அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் அதிபர்கள் நன்மை டைந்த காலம் முடிவடைந்துவிட்டது. அப்படி அநீதிகள் நடந்தால், தயவுசெய்து அமைச்சுக்கு அறிவியுங்கள் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தொடங்கொட பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஒருமித்த கருத்தின் அடிப்படையில் சமூகத்தை மேம்படுத்த நாம் பாடுபடுகையில், தவறுகளைச் சரி செய்து முறைமையை மாற்ற மக்கள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தலையிடுகிறார்கள். இதுதான் நாம் எதிர்பார்த்த மாற்றம். இதுதான் ஜனநாயகம் என்பது. இப்போது, முன்னர் போன்று பொலிஸில் முறைப்பாடு அளிக்கச் சென்று திட்டுதல்களை நான் கேட்க வேண்டியதில்லை. கவனமாகக் கேட்டு, முறைப்பாடுகள் சரியாக பதிவு செய்யப்படுகின்



றன. சுமுகமாக உரையாடுகின்றார்கள். இதுதான் மக்கள் கேட்கும் மாற்றம்.

இந்த நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்னை ஒரு பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பது தான்.

சில காலமாகவே வழக்கத்தில் இருந்ததுபோல, மக்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்க அரசியல்வாதிகளிடமிருந்து கடிதங்களைப் பெற வரிசையில் நின்றார்கள். அப்படித்தான் பிள்ளைகள் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர், அந்த முறையை நாங்கள் மாற்றினோம்.

கடிதம் கேட்பது தவறு என்று இன்று மக்கள் எங்களிடம் கூறுகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அந்தத் தவறு நடப்பதை பார்க்க அவர்கள் விரும்பவில்லை. இங்கு வருபவர்கள் கவலையில் அழுகிறார்கள், சில விடயங்களை கேட்கின்ற போது எனக்கும் அழுகை வருகின்றது.

ஆனால் அவர்க ளில் யாரும் என்னிடம் எந்தத் தவறையும் செய்யச் சொல்ல வில்லை-என்றார். (அ)

# உலக சுகாதார நிறுவன தெற்காசிய மாநாடு இந்த வருடம் இலங்கையில்!

கொழும்பு, ஏப். 25

2025 ஆம் ஆண்டு தெற்காசிய பிராந்திய மாநாட்டை இலங்கையில் நடத்த உலக சுகாதார அமைப்பு ஒப்புக் கொண்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய அலுவலகத்தின் (புதுடில்லி) திட்ட இயக்குநர் டாக்டர் தாமரங்கி தக்சபோன் மற்றும் நிர்வாக இயக்குநர் ரோபெட் செல்மின்ஸ்கி ஆகியோரை சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகத்தில் நேற்றுக் காலை சந்தித்த போது அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அதன்படி, தெற்காசிய பிராந்தியத்தின் ஒவ்வொரு நாட்டிலும் ஆண்டுதோறும் நடைபெறும் தெற்காசிய பிராந்திய மாநாட்டை இந்த ஆண்டின் பிற்பகுதியில் இந்த நாட்டில் நடத்துவதற்கு மேற்கண்ட கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய பிராந்திய நாடுகளான இலங்கை, இந்தியா, மாலத்தீவு, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், தாய்லாந்து, வட கொரியா, மலேசியா, இந்தோனேசியா, திமோர்-லெஸ்டே மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுகாதார அமைச்சர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் பங்கேற்க உள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய அலுவலகத்தின் (புது டில்லி) திட்ட இயக்குநர் டாக்டர் தாமரங்கி தக்சபோன், இலங்கையில் வழங்கப்படும் இலவச சுகாதார சேவையைப் பாராட்டினார்.

நாட்டில் சுகாதாரத் துறையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக இந்த சேவை திறமையாக பராமரிக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் சுகாதார சேவையின் தரம் மற்றும் செயல்திறனைப் பேணுவதற்கு உலக சுகாதார நிறுவனம் ஆற்றிய சிறந்த பங்களிப்பை, குறிப்பாக ஆரம்ப சுகாதார சேவையை நினைவு கூர்ந்த அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, இந்த சிறந்த பங்களிப்பு நாட்டின் சுகாதார சேவையின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்து பெரும் உதவியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். (அ)

# நாடு முழுவதும் 500 பால் விற்பனை நிலையங்கள் நிறுவவுள்ள மில்கோ!

கொழும்பு, ஏப். 25

உள்ளூர் பால் உற்பத்தியாளரான மில்கோ பிரைவேட் லிமிடெட், இலங்கை முழுவதும் 500 பால் விற்பனை நிலையங்களை நிறுவத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

500 உள்ளூர் பால் தொழில் முனைவோருடன் இணைந்து விற்பனை நிலையங்கள் நிறுவப்படும் என நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும், புதிய பால் பொருட்களுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலமும் உள்ளூர் பால் துறையை வலுப்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கமாகும் என்று மில்கோ தலைவர் ஜி.வி.எச். கோட்டாபய குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய மேம்பாட்டு வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில், பங்கேற்கும் தொழில்முனைவோருக்கு நிதி மற்றும் தளபாட ஆதரவை வங்கி வழங்கும் என்றும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# எவ்.பி.ஐ. வெளியிட்டுள்ள கருத்தை நிராகரித்த கத்தோலிக்க திருச்சபை

கொழும்பு, ஏப். 25

**உயிர்த்த ஞாயிறுதாக்குதலின் பிரதான சூத்திரதாரி தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாசிம் என அமெரிக்காவின் எவ்.பி.ஐ. தீர்மானித்திருப்பதை இலங்கை கத்தோலிக்க திருச்சபை ஏற்கமறுத்துள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமே என எவ்.பி.ஐயின் விசேட முகவர் மெரிலீ ஆர் குட்வின் தெரிவித்துள்ளார் எனச் சமீபத்தில் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் இதனை நிராகரித்துள்ள கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் பேச்சாளர் அருட்தந்தை ஜூட் கிருசாந்த பெர்ணாண்டோ, இலங்கை அதிகாரிகளுடனோ அல்லது இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையுடனோ கலந்தாலோசனைகளை மேற்கொள்ளாமல் எவ்.பி.ஐ. எவ்வாறு இந்த முடிவுக்கு வந்தது என கேள்வி எழுப்பியுள்ளார்.

பல ஆணைக்குழுக்களின் அறிக்கைகளும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் சட்டமா அதிபரும் சனல் 4 அம்பலப்படுத்திய விடயங்களும் சஹ்ரான் ஹாசிம் தனியாகச் செயற்படவில்லை, பெரும் சதியொன்று இடம்பெற்றுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளன என ஜூட் கிருசாந்த பெர்ணாண்டோ தெரிவித்தார்.

எங்களுக்கும் இது குறித்த சந்தேகங்கள் உள்ளன. மேற்கூறப்பட்ட அனைத்தையும் அடிப்படையாக வைத்து பார்க்கும்போது சஹ்ரான் ஹாசிமுக்கு பின்னால் யாரோ இருந்தனர் என்பது தெளிவாகின்றது என அவர் குறிப்பிட்டார்.

எவ்.பி.ஐயின் விசாரணை முறைகள் குறித்து கேள்வி எழுப்பியுள்ள அவர், எவ்.பி.ஐ முகவர் எப்படி விசாரணைகளை மேற்கொண்டார், இலங்கையில் அவர்கள் யாரை சந்தித்தனர், அவர்கள் எந்த அடிப்படையில் இந்த முடிவுக்கு வந்தனர் என கேள்வி எழுப்பினார்.

எவ்.பி.ஐ எங்களுடன் பேசவில்லை. ஆகவே அவர்கள் சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என அருட்தந்தை ஜூட் கிருசாந்த பெர்ணாண்டோ குறிப்பிட்டார். (அ)

# மிதமான நிலையில் காற்றின் தரம்!

கொழும்பு, ஏப். 25

பெரும்பாலான பகுதிகளில் மிதமான நிலையில் காற்றின் தரம் காணப்படும் என கணிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு மற்றும் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில், பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரக் குறியீடு மிதமான அளவிலும், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் ஆரோக்கியமான நிலையிலும் காற்றின் தரம் காணப்படுகின்றது.

அடுத்த 24 மணி நேரத்தில் காற்றின் தரக் குறியீடு 38 மற்றும் 80 க்கு இடையில் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலான பகுதிகளில் மிதமான நிலையிலும், கொழும்பு 07, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளில் ஆரோக்கியமான நிலையிலும் காணப்படும். நாட்டின் பெரும்பாலான நகரங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்கு காற்றின் தரம் மிதமான நிலையில் காணப்படும். அதிகமாக போக்குவரத்து நெரிசல் காணப்படும் குறிப்பாக காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை மற்றும் பகல் வேளைகளில் பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி மணி வரை காற்றின் தரம் குறைவடைந்து காணப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# முன்னாள் பொலிஸ் அலுவலர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, ஏப். 25

முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் நுரைச்சோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் புத்தளம், நுரைச்சோலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 7 நாட்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# பூஸா சிறையில் விசேட சோதனை

### பல பொருட்கள் கைப்பற்றல்

கொழும்பு, ஏப். 25

பூஸா சிறைச்சாலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை மேற்கொள்ளபட்ட விசேட சோதனை நடவடிக்கையில் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பூஸா சிறைச் சாலையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை யின் போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கையில், கையடக்கத் தொலைபேசி, 2 சார்ஜர்கள், சிம் அட்டைகள் மற்றும் டேட்டா கேபிள்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# மனித நேயமுள்ள அனைவரும் பாப்பரசரின் மறைவால் துக்கம்

### இலங்கைத் தமிழரசுக் கட்சி இரங்கல்




யாழ்ப்பாணம், ஏப். 25

பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மறைவு உலகி லுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களை மட்டுமன்றி மனித நேயமுள்ள அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது என இலங்கை தமிழ் அரசுகட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்-

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட இலத்தீன் அமெரிக்க நாடான ஆஜென்ரீனாவைச் சேர்ந்த பாப்பரசர் பிரான்ஸிஸ் மறைவு உலகிலுள்ள அனைத்து கிறிஸ் தவ மக்களை மட்டுமன்றி மனிதநேயமுள்ள அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

உலகின் மிகப்பெரிய கிறிஸ்தவ மதக் கட்டமைப்பின் தலைவராக இருந்த பாப்பரசர் பிரான்சிஸ், இன, மத, பூகோள வேறுபாடுகளைக் கடந்து ஒரு பெரிய வலுவற்றவர்களினதும், வசதியற்றவர்களதும், தேவைகளைத் தேடி அலையும் ஏதிலிகளதும் குரலாக ஒலித்தவர், அவர்களை நேசித்து அவர்களுக்காகக் குரல் கொடுத்தவர்.

ரஷ்யா-உக்ரைன் யுத்தமென்றாலும் சரி, இஸ்ரேல் பலஸ்தீன யுத்தமென்றாலும் சரி சிரிய நாட்டு உள்நாட்டுப் போர் என்றாலும் சரி, போர் நிறுத்தப்பட்டு உலகம் முழுவதிலும் சமாதானம் நிலவவேண்டும் என்ற மனித இன நேயம் மிக்க மாண்பு கொண்டவராகவும், உலக நாடுகளின் அனைத்துத் தலைவர்களினாலும் மிகவும் மதிக்கப்பட்ட பெரும் மதத் தலைவராக விளங்கினார்.

தமது காலத்தில் உலக அமைதி, ஒற்றுமை, சமாதானம் நிலைத்து நிற்கப்படுவதன் பொருட்டு பல நாடுகளுக்கு விஜயம் செய்து நல்லாசி வழங்கி ஊக்கப்படுத்தியவர்.

அவ்வாறான அவரது உலக நாடுகளின் சுற்றுப்பயணத்தில் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அவர் எமது நாட்டுக்கு வருகை தந்தமை பெருமைக்குரியது.

அதிலும் எமது வடக்கு மாகாணத்தின் பெருமைக்குரிய திருத்தலமான மன்னார் மடுமாதா திருத்தலத்திற்கு 2015.01.14ஆம் திகதி வருகை தந்தமை மதங்கள் கடந்து நாம் செய்த பெரும் பாக்கியமே.

இந்த பெரும் மதத்தலைவரது இழப்பினால் துயருறுவோர் அனைவருடனும் இலங்கை தமிழரசுக் கட்சியின ராகிய நாமும் இணைந்து துயர் பகிர்ந்து கொள்கின்றோம்-என்றுள்ளது.

# டயனாவுக்கு எதிரான வழக்கு ஜூலை 31இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 25

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிரான வழக்குகளின் விசாரணையை எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செல்லுபடியான விஸா இன்றி இலங்கையில் தங்கியிருந்ததாக தெரிவித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிராக குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் 7 குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. இருப்பினும் பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று சமூகமளிக்காமையினால் குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனவல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜூலை 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கொழும்பு மேலதிக நீதவான் உத்தர விட்டுள்ளார். (அ)

# போதைப்பொருட்களுடன் நாடு முழுக்க 361 பேர் கைது!

கொழும்பு, ஏப். 25

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 361 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 111 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 167 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 82 பேரும், சட்டவிரோத சிகரட்டுகளுடன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, 122 கிராம் 447 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 168 கிராம் 513 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 01 கிலோ 154 கிராம் கஞ்சா போதைப் பொருளும், 300 சட்டவிரோத சிகரட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# விளையாட்டு பயிற்சியில் பங்கேற்றாத மாணவிகளைத் தண்டித்த ஆசிரியை!

கொழும்பு, ஏப். 25

சுகயீனம் காரணமாக பாடசாலையில் காலை வேளையில் நடைபெற்ற விளையாட்டு பயிற்சியில் பங்குபற்றாத மாணவிகள் சிலரை ஆசிரியை ஒருவர் பாடசாலை நேரம் முடிவடையும் வரை வெயிலில் முழங்காலில் வைத்துள்ளதாக மொரகொட பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இந்த சம்பவம் அநுராதபுரம் மொரகொட கெக்கிராவை பிரதேசத்தில் உள்ள பாட சாலை ஒன்றில் இடம்பெற்றுள் ளது.6 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவிகளே இந்த சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மாணவிகளின் பெற்றோர்கள் சிலர் மொரகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் மொரகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை ஆராயும் பொலிஸ் குழுவில் ஷானி அபயசேகரவா?

## நாமல் ராஜபக்ஷ கடும் எதிர்ப்பு



கொழும்பு, ஏப். 25

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் ஈடுபட்ட ஒருவரை - ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரை,சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட ஒருவரை உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக நியமித்துள்ளமை முற்றிலும் பொருத்தமற்றது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக ஷானி அபயசேகரவை நியமித்தமை கடும் கேள்விகளை எழுப்புகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் ஈடுபட்ட ஒருவரை - ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரை, சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட ஒருவரை இந்த குழுவின் முக்கிய பொறுப்புக்கு நியமித்துள்ளமை முற்றிலும் பொருத்தமற்றது.

இது வெறுமனே நடைமுறை ரீதியாக தவறான நடவடிக்கை மாத்திரமல்ல,இது ஒவ்வொரு நெறிமுறை தரத்தையும் மீறுவதாகும். இது செயல்முறையின் நம்பகதன்மை மீது இருண்ட நிழலைப் போர்த்துகின்றது.

சட்ட ரீதியான முடிவுகள் நியாயமான விதத்தில் எடுக்கப்படுவது மாத்திரம் முக்கியமானதல்ல, நீதித்துறையின் மீது மக்களிற்கு நம்பிக்கை ஏற்படுதவற்கு அவ்வாறான முடிவுகள் வெளிப்படையானதாக நியாயமானதாக எடுக்கப்பட்டதாக மக்கள் உணர்வதும் அவசியம்.

மக்களின் நம்பிக்கை ஏற்கனவே மிகவும் பலவீனமான நிலையில் உள்ள சூழலில் இவ்வாறான தீர்மானங்கள் சந்தேகம் மற்றும் ஏமாற்றத்தை ஆழப்படுத்தும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற தருணத்தில் ஷானி அபயசேகர சி.ஐ.டியின் இயக்குநராக பணியாற்றிக் கொண்டிருந்தார்.இந்த தாக்குதல் குறித்த விசாரணைகளில் முக்கியமானவராக காணப்பட்டார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராயும் பொலிஸ் குழுவில் அவரையும் இணைத்திருப் பது,நியாய பூர்வமான கரிசனைகளை எழுப்புகின்றது.ஷானி அபய சேகரவின் சமீபத்தைய அரசியல் அறிக்கைகள் இந்த விடயத்தை மேலும் குழப்பகரமான தாக்குகின்றது. அவரது பக்கச் சார்பை தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

இந்த விசாரணையை மேற்பார்வை செய்யும் அதிகாரிக்கு அரசியல் தொடர்புகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை ஏற்படும்?இது ஒரு கட்சி சார்ந்த விடயமல்ல. இது தார்மீக தெளிவு மற்றும் நிறுவன ஒருமைப்பாடு சார்ந்த விடயம்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிப்படையான நம்பகமான நியாயமான செயல்முறை தேவை. இதற்கு குறைவான எதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமல்ல பொறுப்புக்கூறல் என்ற கருத்திற்கே அநீதி இழைப்பதாக அமையும்-என்றார். (அ)

# நாட்கூலி முறைமையை ஒழிப்பதே நிரந்தர தீர்வு!

## ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 25

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பானது நிரந்தர தீர்வாக அமையாது. நாட்கூலி முறைமையை இல்லாதொழிப்பதே நிரந்தர தீர்வாக அமையும்." என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை முன்னிட்டு டிக்கோயா, வனராஜா, போடைஸ், பட்டல்கள, கெர்கர்ஸ்வோல்ட், மோரா ஆகிய தோட்டப் பகுதிகளில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய ஜீவன் தொண்டமான் கூறியவை வருமாறு-நாட்டின் ஜனாதிபதி , தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். ஆனால் தற்போது அவர் வாக்குறுதிகளை மறந்து எதிர்கட்சி தலைவர் போன்று செயற்பட்டு வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதாக உறுதியாக அறிவித்ததுடன், வரவு-செலவுத் திட்ட வாசிப்பிலும் தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்போது அனைத்தையும் மறந்து தோட்டக் கம்பணிகளுடன் கலந்துரையாடி முடியுமான அளவு 1700 ரூபாய் நாட் சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதாக அறிக்கை விடுத்துள்ளார். இதனை ஏமாற்று நாடகமா கவே புரிந்துகொள்ள வேண்டும்.

நான் அமைச்சராக இருந்த காலப்பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக என்னால் முடிந்தளவிலான வேலைகளை மக்கள் நலனுக்காக செய்திருந்திருந்தேன்.

தற்போது ஜானாதிபதியால் வரவு-செலவுத் திட்டத்தினூடாக மலையகப் பெருந்தோட்ட பகுதிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் அநீதி இழைக்கப்பட்ட கண் துடைப்பாகவே காணப்படுகின்றது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பானது நிறந்தர தீர்வாக அமையாது, மாறாக நாட்கூலி முறைமை இல்லாதொழிப்பதே நிறந்தர தீர்வாகும்-என்றார். (அ)

# மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை அமைக்கும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைக்குக!

கொழும்பு, ஏப். 25

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கிடைக்கும் பதிலின் அடிப்படையில் மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஆட்சியை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும். அதற்குரிய சூழலை உருவாக்குவதற்கான பொறுப்பை மக்களிடமே ஒப்படைக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் எம்மை விட நாட்டு மக்கள் நன்கு அறிவர். ட்ரம்ப்பின் வரி அதிகரிப்பு தொடர்பில் நாடு என்ற ரீதியில் நாம் எவ்வாறான தீர்மானங்களை எடுக்கப் போகின்றோம் என்பதே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏற்றுமதி பொருளாதாரத்தையும் தொழில் வாய்ப்புக்களையும் பாதுகாத்துக் கொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வெறுமனே பேசிக்கொண்டிருக்காமல் நாட்டை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து சிந்திக்கவேண்டும்.

மக்கள் தமது வாழ்க்கையை எவ்வாறு முன்கொண்டு செல்வது என்ற போராட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். அந்த வகையில் மக்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதற்கே அரசாங்கம் முன்னுரிமையளிக்கவேண்டும்.

இன்னும் 10 நாட்களில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கிடைக்கும் பதிலின் அடிப்படையில் மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஆட்சியை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும். அதற்குரிய சூழலை உருவாக்குவதற்கான பொறுப்பை மக்களிடமே ஒப்படைக்க வேண்டும்-என்றார். (அ)

# மாணவர்களுக்கு போசாக்கு உணவு திட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 25

உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கான உணவை வழங்கும் திட்டத்துடன் தொடர்புள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு அதனைச் செயல்படுத்த கொள்கை ரீதியான முடிவு எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துடன் தொடர்புள்ள சகல அமைச்சுக்கள்,அரச நிறுவனங்கள் மற்றும் உலக உணவுத் திட்டம் , பில் மற்றும் மிலிண்டா கேட் பௌண்டேசன் மற்றும் பாத் பைண்டர் நிறுவனம் என்பவற்றின் பிரதிநிதிகள் அடங்கலாக தொடர்புள்ள அனைத்துத் தரப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

குறைந்த போசாக்கு மட்டமுள்ள மாணவர்களுள்ள மாவட்டங்களில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்காக செயற்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்துடன் இணைந்ததாக பாடசாலை மாணவர்களிடையே இரும்புச் சத்து குறைபாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப் படுகிறது.

கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு,மாகாண சபைகள்,உணவு மேம்பாட்டு சபை, உலக உணவுத் திட்டத்திற்கான கூட்டு செயலகம் என்பன இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றன.

மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கம் இந்த வருடத்தில் 32 பில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதோடு அதன் பெறுபேறு தொடர்பில் சுகாதார மற்றும் போசாக்குப் பிரிவு முன்னெடுக்கும் முறையான ஆய்வின் பின்னர் இதனை நாடளாவிய ரீதியில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதன் ஊடாக

பாடசாலை மாணவர்களிடையே இருப்புச் சத்துக் குறைபாடு மட்டுப்பட்டுத்தப்பட்டுள்ளதா என கண்டறிவது ஆய்வின் நோக்கமாகும்.குறிப்பாக பாடசாலை மாணவர்களின் இரத்த சோகையை நீக்குவதற்காக, இரும்புச்சத்து மற்றும் போலிக் அமிலத்துடன் தயாரிக்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசியை பாடசாலை மாணவர்களின் மதிய உணவில் இணைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# உள்ளூராட்சித் தேர்தல் 429 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஏப். 25

2025 உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக, கடந்த மார்ச் 03 முதல் ஏப்ரல் 24 வரை, தேர் தல் தொடர்பான மொத்தம் 429 முறைப்பாடுகளை இலங்கை பொலிஸார் பெற்றுள்ளனர்.

இந்த முறைப்பாடுகளில் 61 தேர்தல் வன்முறை தொடர்பானவை மற்றும் 222 தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை என்றும் பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில், 25 வேட்பாளர்களும் 98 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.அதேநேரத்தில் 23 வாக னங்கள் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

இதற்கிடையில்,

நேற்று காலை 06.00 மணியுடன் முடி வடைந்த 24 மணி நேரத்தில், தேர்தல் தொடர்பான மொத் தம் 31 முறைப்பாடுகள் பொலி ஸ [illegible]

இவற்றுள் 03 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறை தொடர் பானவை மற்றும் 20 முறைப்பா டுகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை.

இந்தக் காலகட்டத்தில் பொலிஸார் 02 வேட்பாளர்களையும் 06 ஆதரவாளர்களையும் கைது செய்துள்ளனர்.

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தல் 2025 மே 06 ஆம் திகதி நடைபெற உள்ளது.

அதற்கான தபால் மூல வாக்குப் பதிவு நடவடிக்கைகள் நேற்று காலை ஆரம்பமாகின. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாத சக்திகளின் சூழ்நிலை கைதி அநுர!

## அவரைப்போன்று யாரும் பொய் வாக்குறுதிகளை வழங்காதீர்கள்



காரைதீவு, ஏப். 25

**ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பேரினவாத சக்திகளின் சூழ்நிலை கைதியாக இருக்கின்றார் என்று சாடியுள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கம், ஜனாதிபதி மாதிரி பொய் வாக்குறுதிகளை வழங்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் ஊடகச் சந்திப்பும் காரைதீவு பொது நூலக மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் பேரினவாதிகளின் சூழ்நிலை கைதியாகவே இருப்பார். அத்துடன் ஜனாதிபதி செய்வார் என எதிர்பார்த்த எந்தவொரு விடயங்களையும் அவர் செய்யவில்லை. எனவே, அவர் பொய் தான் பேசுகிறார் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

ஜனாதிபதி மாதிரி பொய் வாக்குறுதிகளை வழங்க வேண்டாம் என எங்களது உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கு தெளிவாக அறிவுறுத்தியுள்ளோம். மக்கள் இவ்வாறான பொய் வாக்குறுதிகளால் தான் சலித்து பொய் உள்ளனர். எமது வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசிய அரசியல் வீழ்ச்சிக்கு காரணம் கொள்கைகள் அல்ல. தவறான வாக்குறுதிகளும் வாக்குறுதிகளை மீறியமையும் ஆகும் - என்றார். (எ-01)

# தபால் மூல வாக்களிப்பு



கிண்ணியா, ஏப். 25

தபால் மூல வாக்களிப்பு கிண்ணியா பிரதேச செயலகம், கிண்ணிய வலய கல்வி அலுவலகம் முதலானவற்றில் நேற்றுக் காலை 08:30 மணி முதல் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செய லகத்தில் 176 வாக்காளர்கள் இம்முறை தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்தனர்.

கிண்ணியா பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் அமைதியாகவும், சுமுகமாகவும் வாக்களிப்பு நடைபெற்றது.

தபால் மூலம் தமது வாக்குகளை பதிவு செய்வதற்காக அதிகாரிகள் வருகை தந்தனர்.

கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்டோர் இவ்வாறு வாக்களித்தனர். (எ)

# 12 வயதுச் சிறுமி நீரில் மூழ்கி பலி!

அம்பாறை, ஏப். 25

ஒலுவில் பிரதேசத்தில் நீர் குட்டை ஒன்றில் குளிக்கச் சென்ற, ஒலுவில் 04 ஆம் பிரிவைச் சேர்ந்த 12 வயது சிறுமி எவ். பாத்திமா ஹிக்மா நீரில் மூழ்கி உயிரிழந்ததாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் உள்ள நீர் குட்டையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நண்பி ஒருவருடன் குளிக்கச் சென்ற போதே இவ்வாறு மரணமடைந்தார்.

மரணம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். நீரிலிருந்து மீட்கப்பட்ட மற்ற சிறுமி அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (அ)



# வீட்டுக்கு வீடு பிரசாரம் ஆரம்பம்

காரைதீவு, ஏப். 25

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபையின் மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளருக்காக வீட்டுக்கு வீடு பிரசாரம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டார். (எ)

# சுற்றுச்சூழல், சுகாதாரம் குறித்து மாளிகைக்காட்டில் கள ஆய்வு

அம்பாறை, ஏப். 25

அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு கிழக்கு கடற்கரை பகுதி சுற்றுச்சூழல், சுகாதாரம் தொடர்பான கள ஆய்வு மற்றும் கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பான பரிசோதனை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.



இதன்போது, காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வசீர், பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகாதர்கள், பகுதி கிராம சேவகர், காரைதீவு பிரதேசசபை செயலாளர், கடற்தூழல் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகாதர்கள், மீன்வாடி சங்க உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய திணைக்கள உத்தியோகதர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது இப்பகுதி வியாபார நிலையங்களின் திண்ம, திரவ கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பான தொழிநுட்ப திட்ட ஆலோசனை சுகாதார வைத்திய அதிகாரி அவர்களால் முன் மொழியபட்டது. மேலும் இப்பகுதியில் அனைத்து அரச நிறுவங்களின் பங்களிப்போடும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. (அ)

# கல்முனை மாநகர பொதுச்சந்தை வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டம்

கல்முனை, ஏப். 25

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை கல்முனை ஆசாத் பிளாஷா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, பொதுச் சந்தையில் உள்ள வர்த்தகர்கள், கடை உரிமையாளர்கள், வியாபாரத்துக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்கள், அங்காடி வியாபாரிகள், கல்முனை பொதுச் சந்தையின் வீதியோர வியாபாரிகள், மீன் சந்தை வியாபாரிகள், வியாபார நிலையங்களின் உதவியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சந்தையிலுள்ள கடைகளுக்கான வாடகை நிலுவைகளை அறவிடுதல், வாடகைக் கட்டணங்களை சீரமைப்பு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டதுடன் கல்முனை மாநகர பொதுச் சந்தையினதும் வர்த்தகர்களினதும் நலன் கருதி கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் வர்த்தகசங்கம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வர்த்தகர்கள் வலியுறுத்தினர்.

எதிர்வரும் சர்வதேச தொழிலாளர் தினமன்று கல்முனை மாநகர பொதுச் சந்தை மூடப்பட்டு அங்கு உள்ள அனைத்து வர்த்தகர்கள் உட்பட தொழிலாளர்கள் சந்தையில் உள்ள வர்த்தகர்கள் சிலரின் பொருளாதார பங்களிப்புடன் ஒன்றுகூடல் மற்றும் சுற்றுலா ஒன்றும் தயார் செய்யப்பட்டுள்ளது. (எ-01)




நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று நடைபெற்றது. திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதி தலைமையில் நடைபெற்ற இந்த தபால் மூல வாக்களிப்பில் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு வாக்களித்தனர். அமைதியான முறையில் இடம் பெற்ற தபால் மூல வாக்களிப்பை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர், உதவித் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்டோரும் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் பாடசாலையின்மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

## சிறுவர்கள் உட்பட 23 பேர் உயிரிழப்பு!



டெல் அவிவ், ஏப். 25

**காஸாவில் உள்ள இஸ்லாமிய பாடசாலையின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் சிக்கி சிறுவர்கள் உட்பட 23 பேர் உயிரிழந்தனர்.**

காஸா - இஸ்ரேல் இடையே யான போர் ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காஸா மீது இஸ்ரேல் இராணுவம் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. பணயக் கைதிகளை மீட்கவும் ஹமாஸ் ஆயுதக் குழுவினரை முழுவதுமாக அழிக்கும் நோக்கிலும் இஸ்ரேல் இராணுவம் சரமாரித் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்தப் போரில் இதுவரை 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். இந்த நிலையில், நேற்று முன்தினமும் இஸ்ரேல் இராணுவம காஸா மீது அதி பயங்கர தாக்குதலில் ஈடுபட்டது. காஸாவின் ரபா பகுதியை நோக்கி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அங்குள்ள இஸ்லாமிய பாடசாலை உட்பட அப்பகுதி இருந்த கட்டடங்கள் தீப்பிடித்து இடிந்து விழுந்தன. இந்தக் கோரத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 23 பேர் உயிரிழந்தனர். (எ)



# பாப்பரசர் பிரான்சிஸ் உடலுக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி

ரோம், ஏப். 25

பாப்பரசர் பிரான்சிஸ் உடலுக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த 21ஆம் திகதி காலமானார். வயது முதிர்வு மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக அவர் உயிரிழந்தார். பாப்பரசர் பிரான்சிஸ் மறைவுக்கு உலகத்தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அவரின் இறுதிச்சடங்கு நாளை 26ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இறுதிச் சடங்குக்கு முன் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக பாப்பரசர் பிரான்சிஸ் உடல் ரோம் நகரில் உள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலுக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (எ)

# ட்ரம்ப் நிர்வாகத்திலிருந்து எலான் மஸ்க் விலகல்?

வாஷிங்டன், ஏப். 25

ட்ரம்ப் நிர்வாகத்திலிருந்து வெளியேற எலான் மஸ்க் தீர்மானித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதை தொடர்ந்து அரசு நிர்வாக செலவுகளை குறைப்பதற்காக செயல்திறன் துறை என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக உலக பணக்காரர்களில் ஒருவரும் "டெஸ்லா" நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரியுமான எலான் மஸ்க் பொறுப்பு வகித்து வருகிறார். தொடர்ந்து அரசு நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் விதமாக பல அதிரடி முடிவுகளை மேற்கொண்டார்.

அரசு ஊழியர்களை பணியை விட்டு நீக்குதல், அரசு செலவுகளை குறைத்தல் உள்ளிட்டவற்றில் மஸ்க் தலைமையிலான செயல்திறன் துறை தீவிரமாக ஈடுபட்டது. இதனால், அரசுக்கு ஒருநாள் செலவிலிருந்து இலங்கை மதிப்பில் 119 ஆயிரம் கோடி ரூபாய் வரை குறைக்கப்பட்டது. இந்த நிலையில் ட்ரம்புடன் இணைந்து கொண்டு எலான் மஸ்க் செயல்படுவதால் அவருடைய டெஸ்லா நிறுவனம் உள்ளிட்டவற்றின் பங்குகள் மதிப்பு குறையத் தொடங்கின. கடந்த 22 ஆம் திகதி ஒரேநாளில் 20 சதவீதம் வரை டெஸ்லாவின் இலாபம் குறைந்தது. இந்த நிலையில் ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் செயல்திறன் துறைக்கு நேரம் ஒதுக்குவதை குறைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். இதனால், டெஸ்லா வளர்ச்சிக்கு பங்காற்ற முடியும்- என்றார். அடுத்த (மே) மாதத்துக்குள் ட்ரம்ப் நிர்வாகத்திலிருந்து முழுவதுமாக வெளியேறிவிடுவேன் எனவும் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். (எ)



# காஷ்மீரில் நடந்த தாக்குதலுக்கும் பாகிஸ்தானுக்கும் தொடர்பில்லை

## அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் விளக்கம்

இஸ்லாமாபாத், ஏப். 25

இந்தியாவின் காஷ்மீரில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்கு இந்திய அரசே காரணம் என்றும் தங்களுக்குத் தொடர்பில்லை என்றும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

எந்த வடிவத்திலும், எந்த இடத்திலும் பயங்கரவாதத்தை தாங்கள் ஆதரிப்பது இல்லை என்றும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமான பஹல்காம் என்ற இடத்தில் சுற்றுலாப் பயணிகளை குறி வைத்து பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 28 பேர் பரிதாபமாக பலியாகினர். பயங்கரவாதிகளை பிடிக்க ட்ரோன்கள், மோப்ப நாய்கள் உதவியுடன் தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஹெலிகொப்டர்கள் மூலம் மலைப்பகுதிகளில் தீவிர கண்காணிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தின் லஷ்கர்-இ-தொய்பாவின் துணை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்த நிலையில் காஷ்மீர் பயங்கரவாதத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்று பாகிஸ்தான் அரசு விளக்கமளித்துள்ளது. இது தொடர்பில் அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப் கூறுகையில், "பாகிஸ்தானுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நாங்கள் பயங்கரவாதத்தை ஆதரித்ததில்லை, எனவே இதற்கு பாகிஸ்தானை குறை கூற வேண்டாம்.

இது அனைத்தும் உள்நாட்டில் உருவாக்கப்பட்டது. இந்தியாவுக்கு எதிராக பல்வேறு மாநிலங்களில் புரட்சிகள் உள்ளன. ஒன்றல்ல, இரண்டல்ல, 10 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் இயங்குகின்றன. நாகலாந்து முதல் காஷ்மீர் வரை, தெற்கில், சத்தீஸ்கர், மணிப்பூர் உள்ளிட்ட எல்லா இடங்களிலும், இந்திய அரசாங்கத்துக்கு எதிரான புரட்சிகள் உள்ளன.



இந்துத்துவ சக்திகள் மக்களைச் சுரண்டுகின்றன, சிறுபான்மையினரை அடக்குகின்றன, கிறிஸ்தவர்களையும் பௌத்தர்களையும் சுரண்டுகின்றன. அவர்கள் கொல்லப்படுகிறார்கள். இது அதற்கு எதிரான புரட்சி. இதன் காரணமாகவே இது போன்ற நடவடிக்கைகள் அங்கு நடக்கின்றன"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்து பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்ட நிலையில், அதை பயங்கரவாதச் செயல் என்று விவரிக்கவோ, கண்டிக்கவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பாப்பரசரின் இறுதிச்சடங்கில் டொனால்ட் ட்ரம்ப் பங்கேற்பு

வாஷிங்டன், ஏப். 25

பாப்பரசர் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரோம் செல்கிறார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (வயது -88) கடந்த 21ஆம் திகதி காலமானார்.

அவரின் இறுதிச்சடங்கு நாளை 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தாலியின் ரோம் நகரில் உள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் பாப்பரசர் பிரான்சிஸ் உடல் வைக்கப்பட்டு இறுதிச்சடங்கு நடைபெறுகிறது.

இந்த நிலையில், பாப்பரசர் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பங்கேற்கிறார். இதற்காக அவர் இன்று வெள்ளிக்கிழமை காலை தனிவிமானம் மூலம் இத்தாலியின் ரோம் நகருக்குச் செல்கிறார். அதன்பின்னர், சனிக்கிழமை நடைபெறவுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் டொனால்ட் ட்ரம்ப் பங்கேற்கிறார். (எ)



# தீவிரவாத தாக்குதலையடுத்து "சிந்து நதிநீர் பங்கீடு நிறுத்தம்"

புதுடில்லி, ஏப். 25

இந்தியாவின் காஷ்மீரில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலையடுத்து சிந்து நதிநீர் பங்கீடு நிறுத்தப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சரவை குழுக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளிவிவகாரத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலையடுத்து இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதில், தீவிரவாதத்துக்கு புகலிடம் அளிக்கும் பாகிஸ்தானை வழிக்கு கொண்டுவர, சிந்து நதிநீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்துவது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த 1960ஆம் ஆண்டு செய்து கொண்ட சிந்து நதிநீர் பங்கீடு ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படுகிறது.

பஞ்சாப் மாநிலம் அட்டாரி கிராமத்தில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி உடனடியாக மூடப்படுகிறது. முறையான அங்கீகாரத்துடன் இந்த எல்லை வழியாக சென்றவர்களும், வந்தவர்களும் இந்த எல்லை வழியாக மே முதலாம் திகதிக்கு முன்பாக திரும்ப வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி

## ஹைதராபாத் அணியை துரத்தும் தொடர் தோல்விகள்


ஹைதராபாத், ஏப். 25

ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் இரவு ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற 41ஆவது லீக் ஆட்டத்தில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில், ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ட்ராவிஸ் ஹெட் - அபிஷேக் சர்மா களமிறங்கினர். இந்த நிலையில், 2ஆவது ஓவரில் ட்ரென்ட் போல்ட் பந்துவீச்சில் ட்ராவிஸ் ஹெட் ஓட்டமின்றி ஆட்டமிழந்தார். அடுத்து வந்த இஷான் கிஷன் ஓர் ஓட்டத்தில் வெளியேறினார். தொடர்ந்து அபிஷேக் சர்மா 8 ஓட்டங்களிலும் நிதிஷ் குமார் ரெட்டி 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்த நிலையில், ஹைதராபாத் அணி விக்கெட்களை இழந்து தடுமாறியது.

அடுத்து களமிறங்கிய ஹென்ரிச் கிளாசென், நிலைத்து நின்று ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சற்று உயர்த்தினார். இறுதி ஓவர்களில் அதிரடி காட்டிய அபினர் மனோகர் 37 பந்துகளில் 43 ஓட்டங்கள் குவித்தார். அரைச்சதம் கடந்த கிளாசன், 44 பந்துகளில் 71 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். இதையடுத்து 20 ஓவர்கள் முடிவில் ஹைதராபாத் அணி 8 விக்கெட்களை இழந்து 143 ஓட்டங்கள் எடுத்தது. மும்பை அணியில் அதிகபட்சமாக போல்ட் 4 விக்கெட்களும், தீபக் சாஹர் 2 விக்கெட்களும் வீழ்த்தினர். தொடர்ந்து 144 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி மும்பை அணி விளையாடியது.

தொடக்க வீரர்களாக ரியான் ரிக்கெல்டன், ரோஹித் சர்மா களமிறங்கினர். தொடக்கத்தில் ரியான் ரிக்கெல்டன் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வில்



ஜாக்ஸ் 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மறுபுறம் ரோஹித் சர்மா அதிரடியாக விளையாடினார். பந்துகளை பௌண்ட்ரி , சிக்ஸருக்கு பறக்க விட்டார். ரோஹித் சர்மா , சூர்யகுமார் இணைந்து சிறப்பாக விளையாடினர். ரோஹித் சர்மா அரைச்சதமடித்து அசத்தினார் .

இறுதியில் 15.3 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு மும்பை அணி 146 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# இரண்டாவது வீரராக இணைந்த சூர்யகுமார்


ஹைதராபாத், ஏப். 25


ஐ. பி. எல். வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக முறை 25 ஓட்டங்களுக்கு மேல் அடித்த வீரர் என்ற வித்தியாசமான சாதனை பட்டியலில் சூர்யகுமார் யாதவ் 2ஆவது இடம் பிடித்துள்ளார்.

10 அணிகள் பங்கேற்றுள்ள 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில், சூர்யகுமார் யாதவ் 40 ஓட்டங்கள் அடித்தார்.

நடப்பு தொடரில் இதுவரை 9 ஆட்டங்களில் விளையாடியுள்ள சூர்யகுமார் யாதவ் அதில் 373 ஓட்டங்கள் குவித்து அதிக ஓட்டங்கள் அடித்த வீரர்களின் பட்டியலில் 3ஆவது இடத்தில் உள்ளார். அத்துடன் 9 போட்டிகளிலும் 25 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளார்.

இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக முறை 25 ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற வித்தியாசமான சாதனை பட்டியலில் சூர்யகுமார் யாதவ் 2ஆவது இடம் பிடித்துள்ளார். இந்தப் பட்டியலில் 2014ஆம் ஆண்டு நடந்த சீசனில் 10 முறை தொடர்ச்சியாக 25 ஓட்டங்கள் அடித்து ராபின் உத்தப்பா முதலிடத்தில் உள்ளார். (எ)





# மட்ரிட் ரென்னிஸில் அசரென்கா தோல்வி

மட்ரிட், ஏப். 25

மட்ரிட் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்றில் பெலாரஸ் வீராங்கனை விக்ரோரியா அசரென்கா, செர்பியா வீராங்கனை டானிலோவிச் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய டானிலோவிச் 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். இதனால் விக்டோரியா அசரென்கா தொடரிலிருந்து வெளியேறினார்.

# 300 விக்கெட் வீழ்த்தி பும்ரா புதிய சாதனை

ஹைதராபாத், ஏப். 25

ஐ. பி. எல். தொடரில் 300 விக்கெட்கள் வீழ்த்தி மும்பை வீரர் பும்ரா புதிய சாதனை படைத்துள்ளார்.


நேற்று முன்தினம் ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற 41ஆவது லீக் ஆட்டத்தில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ்- மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

இந்த போட்டியில் ஒரு விக்கெட் வீழ்த்திய மும்பை அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவின் ஒட்டுமொத்த ரி - 20 போட்டிகளின் விக்கெட் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்தது.

இந்த மைல்கல்லை எட்டிய 5ஆவது இந்தியர் என்ற பெருமையை பும்ரா பெற்றார். ஏற்கனவே இந்தியாவின் யுஸ்வேந்திர சாஹல், பியுஷ் சாவ்லா, புவனேஷ்வர்குமார், அஸ்வின் ஆகியோர் இந்த இலக்கை எட்டியுள்ளனர். (எ)




# வரலாற்று சாதனை படைத்தார் ரோஹித்




ஹைதராபாத், ஏப். 25

ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 2ஆவது இந்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார் ரோஹித் சர்மா.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் ஹைதராபாத்தில் நடந்த 41ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ரோஹித் சர்மா 70 ஓட்டங்கள் அடித்தார்.

இந்த ஆட்டத்தில் அடித்த 70 ஓட்டங்களையும் சேர்த்து ரோஹித் சர்மா ரி - 20 கிரிக்கெட்டில் 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளார். இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 2ஆவது இந்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார். இந்தப் பட்டியலில் 13, 208 ஓட்டங்களுடன் விராட் கோலி முதலிடத்தில் உள்ளார்.

ஒட்டு மொத்தத்தில் இந்த சாதனையை படைத்த 8ஆவது வீரர் ரோஹித் சர்மா ஆவார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. கிறிஸ் கெயில் - 14,562,
2. அலெக்ஸ் ஹெல்ஸ் - 13,610 ஓட்டங்கள்,
3. சோயப் மாலிக் - 13,571,
4. கைரன் பொல்லார்ட் - 13,537,
5. விராட் கோலி - 13,208 ,
6. டேவிட் வோர்னர் - 13,019,
7. ஜோஸ் பட்லர் - 12,469,
8. ரோஹித் சர்மா - 12,058 ஓட்டங்கள். (எ)

# பங்களாதேஷை வீழ்த்தி சிம்பாவே அணி வெற்றி

சில்ஹெட், ஏப். 25

முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி சிம்பாவே அணி வெற்றி பெற்றது.

சிம்பாவே கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சில்ஹெட்டில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே பங்களாதேஷ் 191 ஓட்டங்களும், சிம்பாவே 273 ஓட்டங்களும் எடுத்தன. 82 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி 3ஆவது நாள் முடிவில் 4 விக்கெட்கள் இழந்து 194 ஓட்டங்கள் எடுத்தது.

4ஆவது நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 79.2 ஓவர்களில் 255 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. பின்னர் 174 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய சிம்பாவே அணி 50.1 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பிரையன் பென்னட் 54 ஓட்டங்களும், பென் கர்ரன் 44 ஓட்டங்களும் எடுத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

இதனாலேயே, பாடசாலைகளுக்கு இரு நாட்கள் விடுமுறை வழங்கப்படவுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மே 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அந்தந்த கிராம அலுவலர்களிடம் வழங்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் மே 7ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## செம்மணியில்...

யாழ். மாநகர சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. இதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எமது ஆட்சிக் காலத்தில் மாநகர சபைக்காக மக்கள் என்ற எண்ணம் நீக்கப்பட்டு மக்களுக்காகவே மாநகர சபை என்ற எண்ணம் உருவாக்கப்பட்டு மக்களுக்கான சேவைகளுக்கு முதன்மையளிக்கப்படும். தேங்கியிருக்கும் மக்கள் சார் தேவைகள் அனைத்தையும் நாம் ஆட்சி அமைத்து மூன்று மாத காலத்துக்குள் மக்கள் நடமாடும் சேவைகள் ஊடாக சீர்செய்யப்படும்.

கழிவகற்றல், மின்விளக்கு பொருத்தல், குடிதண்ணீர் தொடர்பான சேவைகள் மற்றும் முறைப்பாடுகள் பெறுதல் என்பன டிஜிற்றல் முறையில் இலகுபடுத்தப்படும். சோலை வரி உட்பட ஏனைய சேவைகளும் டிஜிற்றல் முறையில் இலகுபடுத்தப்படும். தற்காலத்தில் ஏற்பட்டுள்ள சமூக சீர்கேடுகள், அச்சுறுத்தல்களில் இருந்து யாழ். மாநகர சபையின் குடியிருப்பாளர்களை பாதுகாப்பதற்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் 24 மணி நேரமும் கண்காணிக்ககூடிய வகையில் தரமான கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படும். அத்துடன், சட்டவிரோத செயல்பாடுகளுக்கு ஆதரவாக செயல்படுவோருக்கு பாரபட்சம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## தவறான...

தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்ற அமெரிக் காவை சமாதானப் படுத்துவதில் வெற்றி பெற்றதாக அரசாங்கம் கூறுகிறது. இது எப்படி முடியும்? சீனா மற்றும் பெரிய நாடுகளுடனான தனது பேச்சுகளை அமெரிக்கா இன்னமும் முடிக்கவில்லை. ஆரம்பத்தில் பெரிய நாடுகளில் கவனம் செலுத்தும் பின்னர்தான், அவர்கள் சிறிய நாடுகள் தொடர்பில்கவனம் செலுத்துவார்கள்", என்று கூறினார். (ஐ)

## மருத்துவமனை...

1.4 ஏக்கர் காணி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் காணியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதிலும் இன்று வரை காணி விடுவிக்கப்படவில்லை. இந்தக் காணி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மேலதிக அபிவிருத்தி தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியாகும்.

இந்தக் காணியில் பல வருடங்களாக இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதால் காணியை யாழ். போதனா மருத்துவமனையின் தேவைக்காகப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. இந்தக் காணியை உடனடியாக விடுவித்துத் தருவதற்கு வட மாகாண ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். போதனா மருத்துவமனையின் தேவைகள் அதிகரித்துவரும் தற்போதைய சூழ்நிலையில் இந்தக் காணி அவசியமானது. துரித நடவடிக்கை எடுத்து காணியை விடுவித்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அபிவிருத்திக்கு கைகொடுக்க வேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## உப்பில் நீங்கள் பார்ப்பது...

**சட்டம் சாதாரணர்களுக்கே...**

நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது பிரச்னைக்கு தீர்வு காண்பதே உண்மையான அரசியல். உங்களுக்கு தெரியும் இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் பெரிய மனிதர்களுக்கு இருக்கவில்லை. அது சாதாரண மக்களுக்காகவே இருந்தது. ஆனால், இன்று அதனை உங்களின் வாக்குகளின் மூலம் மாற்றியுள்ளோம். இன்று மிகப்பெரிய இலஞ்சம், ஊழலில் ஈடுபட்ட முதலைகளை பிடித்து அவர்களுக்கு தண்டனை கொடுக்கும் வேலை நடக்கிறது. முன்னொரு காலத்தில் அமைச்சர்களை கண்டு பொலிஸார் ஓடி ஒளிந்தார்கள். இன்று பொலிஸாருக்கு பயந்து அமைச்சர்கள் ஓடி ஒளியும் நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

**வடக்கின் கள்வர்களை பிடிப்போம்...**

கிளிநொச்சியில் ஒருவர் கேட்டார் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற கள்வர்களை நீங்கள் பிடிக்க மாட்டீர்களா என்று. இங்கே இருக்கிற கள்வர்களையும் நாங்கள் கைது செய்வோம். இங்கும் மன்னாரில் இருந்து புத்தளத்துக்கு "சொப்பிங்" பையுடன் வந்தவர்கள் இருக்கின்றனர். இப்போது அவர்களின் சொத்துகள் மூலம் 10 கப்பல்களை வாங்க முடியும். டக்ளஸ் தேவானந்தா எல்லா அரசாங்கங்களிலும் அமைச்சராக இருந்தார். நாங்கள் யாரையும் பாரபட்சம் பார்க்கமாட்டோம்.

பொதுமக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம். பெரிய முதலைகள் கொழும்பிலேதான் இருக்கிறார்கள். ராஜபக்ஷ மிகப் பெரிய முதலை. நாமல், யோசித ஆகியோருக்கு எதிராக பொதுமக்களின் பணத்தை சூறையாடியமைக்காக வழக்குகளை பதிவுசெய்துள்ளோம். எனவே, உங்கள் வாக்குகள் மூலம் நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. நாட்டில் பாதாள உலகக் குழுக்களை உருவாக்கியது ராஜபக்ஷக்களும் விக்கிரமசிங்கக்களும் பிரேமதாஸக்களுமே.

**சோதனை காலம் முடிந்தது**

முன்பு சோதனைச் சாவடிகளில் பெண்கள் பொட்டு வைத்துச் சென்றால் இரு முறை சோதனை செய்வார்கள். பொட்டு இல்லாவிடில் ஒரு தடவை செய்வார்கள், முஸ்லிங்கள் என்றால் மூன்று தடவை செய்வார்கள். அதை மாற்றும் செயல்பாட்டை நாம் முன்னெடுத்துள்ளோம். நாங்கள் அரசை பொறுப்பெடுத்து 5 மாதங்களே ஆகின்றன. முச்சக்கர வண்டியை வேகமாக திருப்பலாம் பேருந்தையும் கப்பலையும் வேகமாக திருப்புவது கடினமே. பிழையான வழியில் சென்ற தேசத்தையே திருப்ப நாம் முற்பட்டுள்ளோம். உங்களுக்கும் எனக்கும் கிடைத்தது சொர்க்கமான பூமி அல்ல. வங்குரோத்தான ஒரு நாடு. ரணில் இந்த நாட்டை ஆண்டபோது டொலரின் பெறுமதி காலையில் ஒரு விலையிலும் மாலையில் ஒரு விலையிலும் இருந்தது. இன்று அதில் உறுதித்தன்மை காணப்படுகிறது. உங்கள் பொருளாதார பிரச்னைகள் தீர்வதற்கு சிறிது காலம் எடுக்கும்.

**இனி கனடா வேண்டாம்...**

காணாமல் ஆக்கப்பட்ட ஒரு மகன் மீண்டும் கிடைத்ததுபோல வடக்கு மாகாணம் எமக்கு கிடைத்துள்ளது. அதனை நாங்கள் அன்போடு பாதுகாப்போம். வடக்கை வளப்படுத்த எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வோம். அங்கு கொழும்பில் இருந்து ஆட்களை வேலைக்கு அமர்த்த நாங்கள் எதிர்பார்க்கவில்லை. கைத்தொழில் பேட்டைகள் உருவாக்குவோம். அதன் பிறகு உங்களின் உறவுகளுக்கு சொல்லுங்கள் கனடா சென்று பனியிலே கஷ்டப்படும் நிலைமை மாறும் என்று.

**100 ஏக்கர் காணி விடுவிக்கப்படும்...**

இந்தப் பிரதேசத்தில் இருக்கும் காணியை யுத்த தேவைகளுக்காக இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். அதற்குப் பின்னரும் தம் வசம் வைத்துள்ளனர். பொதுமக்களின் காணிகளை அவர்களிடமே வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். கிட்டத்தட்ட 25 பகுதிகளில் 100 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை விரைவில் விடுவிப்பதற்கு அடையாளம் கண்டுள்ளோம். சிலர் நினைக்கிறார்கள் தாங்கள் பிடித்த நிலங்களை அப்படியே வைத்திருக்க வேண்டும் என்று. ஏனெனில், மீண்டும் ஒரு யுத்தம் வரலாம் வந்தால் தங்களுக்கு சுலபம் என நினைக்கிறார்கள். மீண்டும் ஒரு யுத்தம் வருமா என்று உங்களிடம் கேட்கிறேன். இனிமேல் யுத்தம் வராது. நாங்கள் தேசிய சமாதானத்தை நிலைநிறுத்தும் ஒரு தேசத்தை கட்டி எழுப்புவோம்.

**வடக்கிலும் இனவாதிகள்...**

நிலங்களை விடுவிப்பது தெற்கிலுள்ள இனவாதிகளுக்கு கஷ்டமாக இருக்கும். இதேபோல வடக்கிலும் இனவாதிகள் உள்ளனர். 4 மாதங்களில் ஓர் அப்பக் கடையை போடுவதே கடினம். நாங்கள் ஆனையிறவு உப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம்.

அதனைத் தொடங்கிய பின்னர் சுமந்திரனுக்கு அது பிரச்னையாக உள்ளது. உப்புப் பைக்கெற்றில் பெயர் பிழையாம். (சிங்களத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை) உப்பிலே நீங்கள் பாப்பது பெயரையா ருசியையா? இவ்வாறான சின்ன விடயங்களுக்காக இனவாதத்தை தூண்டும் ராஜபக்ஷக்கள் போன்ற சகோதரர்கள் வடக்கிலும் உள்ளனர்.

**பெரிய தமிழ் கட்சி நாமே...!**

தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு இன்று சொல்கிறார்கள். இலங்கையிலுள்ள மிகப்பெரிய தமிழ்க் கட்சி தேசிய மக்கள் சக்தியே. வன்னி, யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுளை போன்ற மாவட்டங்களிலுள்ள மிகப்பெரிய தமிழ்க் கட்சி தேசிய மக்கள் சக்தியே. சுமந்திரனுக்கான வாக்குகள் யாழ்ப்பாணத்தில் இம்முறை கிடைக்கவில்லை. யாழ்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சியில் ஒருவர்கூட பாராளுமன்றில் இல்லை. சிறீதரன் கிளிநொச்சி வாக்குகளாலேயே வந்தார். இலங்கையில் உள்ள பெரிய முஸ்லிம் கட்சி தேசிய மக்கள் சக்தியே. பெரிய சிங்கள கட்சியும் அதுவே.

**பிள்ளையான் கைது காரணம்**

ஈஸ்டர் தாக்குதலில் சந்தேகத்தின் பெயரில்தான் பிள்ளையானை கைது செய்திருக்கிறோம். அவரை கைது செய்தவுடன் அவருடன் தொலைபேசியில் கதைக்கவேண்டும் என முதலாவதாக முற்பட்டவர் யார் என்று தெரியுமா பிள்ளையானின் மனைவி அல்ல. ரணில் விக்கிரமசிங்க. அவர்கள் இருவரும் நண்பர்களா? ஒருபோதும் இல்லை. கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக ஏன் மாறுகிறார். அவர் ராஜபக்ஷவின் "கோளையா" உயிர்த்தஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை கண்டறிய விசாரணை நடத்தப்படும்போது, ராஜபக்ஷ, ரணில், சஜித் அனைவரும் குழப்பமடைந்துள்ளனர். நாட்டை வளப்படுத்த முற்படும் போது கள்வர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

**சுமந்திரனைவிட நானே அதிகம்!**

ஒற்றுமையை ஏற்படுத்தும்போது இனவாதிகள் குழப்பமடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் எமது வேட்பாளர்கள் தொடர்பாக தேவையில்லாத விடயங்களை சொல்லி வருகின்றனர். இப்படியான பொய்களை மக்கள் நம்பவேண்டாம். கிராமத்திலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை அமைப்போம். எனவே, மக்கள் அர்ப்பணிப்புள்ள வேட்பாளர்களை தெரிவு செய்யவேண்டும். தமிழ் அரசுக் கட்சிக்கு பணம் வழங்கினாலும் வேலை செய்யமாட்டார்கள். வடக்கு மாகாண சபையில் நடந்தது உங்களுக்கு தெரியும்.

மகிந்த தெற்கிலே களவெடுத்தார். தேர்தலில் கூறுவார் சிங்கள ஜாதி... சிங்கள ஜாதி... என்று. சிங்கள மக்கள் வாக்களித்தார்கள். அவர் திறைசேரியை பூச்சியமாக்கினார். வடக்கிலும் அப்பிடி சிலர் உள்ளனர். அவர்கள் அரசியல் சோம்பேறிகள். சும்மா இருப்பார்கள். தேர்தல் காலங்களில் தமிழர் உரிமை... தமிழர் உரிமை... என்பார்கள். தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். அவர்கள் லண்டனுக்கு போய்விடுவார்கள். இது தானே இதுவரை காலமும் நடந்தது. சில தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் இங்கு தேர்தலில் போட்டியிடும் நிலையில் அவர்கள் அரசியல் சுற்றுலா பயணிகளாகவே உள்ளனர். நான் நினைக்கிறேன் சுமந்திர னைவிட நான் அதிகமாக யாழ்பாணம் போயிருப்பேன் என்று... தேசியமக்கள் சக்தி உங்களுடைய கட்சி - இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு வவுனியாவில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றியபோது அமைச்சர் பிமல் கூறினார். (ஐ)

## அமெரிக்கா...

குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும். அவ்வாறில்லையெனில் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும்.

இது குறித்து ஜனாதிபதிக்கு நான் வழங்கிய ஆலோசனையில் நாட்டை சூழவுள்ள மதில்களை தகர்த்து பொருளாதார பாலங்களை அமைக்குமாறு குறிப்பிட்டிருந்தேன். ட்ரம்ப்பின் வரி அதிகரிப்பை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு நாம் எவ்வாறு ஏற்றுமதி வருமானத்தை தக்கவைத்துக் கொள்வது என்பதை சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லையெனில் இந்த அரசாங் கம் அடுத்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 சதவீதமாகக் குறைத்து விடும் - என்றார். (ஐ)

## நாளை...

தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மக்களை கேட்டுள்ளது. (ஐ)

## வீரர்களின்...

நாட்கள் நடைபெறும். இந்தப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள் ளது.

கடந்த 22 போட்டிகளில் 5 போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியும் 4 போட்டிகளில் ஸ்கந்தவரோதய கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. 13 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்களை...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றபோதும் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மந்தமாக இருக்கிறது. இதற்கும் அப்பால் சில உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தொடர்பில் மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனை மறந்து சில உள்ளூராட்சி மன்றங்கள் செயல்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றின் செயலர்கள் இழைக்கின்ற தவறுகளால் ஒட்டுமொத்தமாக எல்லோருக்குமே பாதிப்பு ஏற்படுகிறது - என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வீதிகளில் குப்பைகள் போடும் செயல்பாடு தொடர்கின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சி. சி. ரி. வி. கமெராக்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, விவசாய உற்பத்தி பொருட்களுக்கான 10 சதவீதக் கழிவு தொடர்பான விவகாரத்தில் ஒவ்வொரு சந்தையாக நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருப்பதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வாக்காளர் அட்டைகளுடன் வேட்பாளர் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 25

சர்வஜன பலய கட்சியிலிருந்து புத்தளம் மாநகர சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 85 வாக்காளர் அட்டைகளுடன் கைது செய்யப்பட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக புத்தளம் தேர்தல் அதிகாரியால் வழங்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸார் புத்தளம் ரத்மல்யாய பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப் பட்டார்.

குறித்த வாக்காளர் அட்டைகளை தபாற்காரர் அவருக்கு வழங்கியதாக தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேகத்திற்குரிய தபாற்காரர் காணாமற் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

காஷ்மீர் தாக்குதல்

## இந்தியப் பிரதமர் மோடிக்கு ரணில் விக்கிரமசிங்க கடிதம்!



கொழும்பு, ஏப். 25

காஷ்மீரின் பஹல்காமில் அண்மையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் பல சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதி, இந்தத் தாக்குதலைக் கண்டித்து 'கொடூரமான குற்றம்' என்றும் குறிப்பிட்டார்.

மேலும், இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் குறிப்பாக உறவுகளை இழந்து வாடும் குடும்பத்தின ருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்ட அவர், மேலும் காயமடைந்தவர்கள் விரைவில் குணம டைய பிரார்த்திப்பதாகவும் கூறினார்.

மேலும், இலங்கையில் மூன்று தசாப்த கால பிரிவினைவாத பயங்கரவாத மோதலையும் நினைவு கூர்ந்த ரணில் விக்கிரமசிங்க, அண்மைய பஹல்காம் தாக்குதல் தீவிரவாதத்தின் தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை தெளிவாக நினைவூட்டுகின்றது என்றார்.

அத்துடன், இந்த விடயத்தை ஒருங்கிணைந்த முறையில் கவனிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய நிர்வாக காஷ்மீரில் உள்ள பஹல்காமின் மேல் பகுதியில் உள்ள பைசரன் புல்வெளிகளின் மலையேற்ற சுற்றுலாப் பகுதியை சுற்றியுள்ள அடர்ந்த காடுகளில் இருந்து வெளிவந்த பயங்கரவாதிகள் குழுவால் நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பல இராஜதந்திர நடவடிக்கைகளை அறிவித்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (அ)

# மன்னார் மக்களுக்கு நன்மை தரும் அனைத்து திட்டங்களுக்கும் ஆதரவு!

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



மன்னார், ஏப். 25

**இந்திய அரசு மன்னாரில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அவர்கள் எத்தனை அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தாலும், மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல், நன்மை தரக்கூடிய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் ஆதரித்து நடைமுறைப் படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - உள்ளூராட்சி மன்றம் ஒரு சிறிய அரசாங்கம். அதன் பணி வீதி அமைப்பது, தெரு மின்விளக்கு பொருத்துவது மாத்திரமே என்று நினைக்கவேண்டாம். இந்த உள்ளூராட்சி சபைகள் ஊடாகவே பல்வேறு சட்டங்களையும் பிரதேசங்களுக்கான செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்த முடியும்.

எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் சட்ட விரோத மண் அகழ்வை நாங்கள் எமது சபைகள் ஊடாக தடை செய்ய முடியும்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு பகுதியில் சுற்றுலாத் துறையையும் அபிவிருத்தி செய்ய முடியும். அதற்கான செயற்றிட்டங்களும் எமது பிரதேச சபை ஊடாக முன்னெடுக்கமுடியும். எந்த அபிவிருத்தித் திட்டமாக இருந்தாலும், அது பிரதேச சபைகள் ஊடாகவே செயற்படுத்தப்படும்.

மன்னார் மாவட்டத்துக்கான அனைத்து அபிவிருத் தித் திட்டங்களையும் எமது சபைகள் ஊடாக செயற்ப டுத்த முடியும்.

இந்தியாவுடன் அதிக நெருக்கத்தில் நாங்கள் இருக்கிறோம். இந்திய அரசு மன்னாரில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. அவர்கள் எத்தனை அபிவிருத்தித் திட்டங்களை செயற் படுத்தினாலும், மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல், நன்மை தரக்கூடிய அனைத்து திட்டங்களையும் ஆதரித்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

உதாரணமாக இராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல் சேவை திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வா றான நல்ல விடயங்களுக்கு நாங்கள் இந்தியாவுடன் இணைந்து திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக எமது பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய முடியும்- என்றார். (அ)

## பெண் வேட்பாளர் கைது!

கொழும்பு, ஏப். 25

தேர்தல் துண்டுப்பிரசுரங்களுடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறி ஆதரவாளர்களின் உதவியுடன் தேர்தல் துண்டுப்பிரசுரங்களை வீடு வீடாக பகிர்வதாக புத்தளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான பெண் வேட்பாளர் கைது செய்யப்பட்டார்.

புத்தளம் - தில்லடி பிரதேசத்தில் வசிக்கும் 61 வயது டைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 86 தேர்தல் துண்டுப்பிரசுரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட் டன. (அ)

## சிறப்பு ரயில் சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 25

சிறி தலதா வழிபாட்டுக்காக நடைமுறைப்படுத்தப் பட்ட விசேட ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து கண்டிக்கு இயக்கப்பட்ட விசேட ரயில் சேவையை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை இந்த விசேட ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது

பொலிஸாரின் வேண்டுகோளின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ)

## முதல் காலாண்டில் நாட்டின் ஏற்றுமதி வீதம் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 25

2025 முதல் காலாண்டினுள் இலங்கையின் ஏற்றுமதி பிரிவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காட்டப்படுவதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள் ளது.

அதன்படி மொத்த ஏற்றுமதி 4,212.13 அமெரிக்க டொலர் வரை அண்மித்ததுடன் அது கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 5.87 வீத வளர்ச்சியாகும்.

2025 மார்ச் மாதத்தில் சந்தைப் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த ஏற்றுமதி 1,507.90 டொலர் வரை அதிகரித்தது.

இது மார்ச் மாதத்துடன் ஒப்பிடும் போது 6.24 வீத கவர்ச்சிகரமான வருடாந்த வளர்ச்சி மற்றும் 2025 பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும் பொது 11.76 வீத மாதாந்த அதிகரிப்பாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அமைச்சர் விஜித ஹேரத் வத்திக்கான் செல்கிறார்

கொழும்பு, ஏப். 25

நித்திய இளைப்பாறுதல் அடைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இறுதி நிகழ்வுகளில் பங்கேற் பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று வெள்ளிக்கிழமை வத்திக்கானுக்கு விஜயம் மேற்கொள்கிறார். (அ)

# பிரத்தியேக இணையக் குற்றப் பிரிவை நிறுவியுள்ளது பொலிஸ் திணைக்களம்

கொழும்பு, ஏப். 25

டிஜிற்றல் பரிவர்த்தனைகளை நோக்கிய நாட்டின் விரைவான மாற்றத்துக்கு மத்தியில், இணையக் குற்றங்களின் கூர்மையான அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை பொலிஸ், ஒரு பிரத்தியேக இணையக் குற்றப் பிரிவை நிறுவியுள்ளது.

சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க இந்த முயற்சியை அறிவித்துள்ளார்.

நாட்டின் விரிவடைந்து வரும் டிஜிற்றல் பொருளாதாரத்துடன் அதிகரித்து வரும் தரவு மீறல்கள் மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட பல்வேறு இணைய (சைபர்) அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதில் இந்த பிரிவு கவனம் செலுத்தும்.

அதிக பரிவர்த்தனைகள் இப்போது இணையத்தில் நடைபெறுவதால், இணையக் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ரணசிங்க குறிப்பிட்டார். அதேவேளை சைபர் குற்ற வழக்குகளே, எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார். (அ)

## மகாபொல கொடுப்பனவு பட்டியல் புதுப்பிக்கப்படும்

கொழும்பு, ஏப். 25

மகாபொல கொடுப்பனவு பெறும் பல்கலைக்கழக மாணவர்களின் பட்டியலைப் புதுப்பிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனை மேற்கொண்டு தரவுத்தளத்தை தயாரிக்கும் என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், மகாபொல கொடுப்பனவு வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதே இதன் நோக்கம் என்று பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org